மாண்புமிகு பேரவைத் தலைவர் : 9 என்று இல்லாமல் 10 மணிக்கு அவை கூடுகிற போது எல்லாம் நாம் கேள்வி நேரத்தை தவிர்ப்பது உண்டு. 11.30 மணிக்குக் கூடி 1.30 மணி வரை நடப்பது என்றால் இரண்டு மணி நேரத்திலே விவாதத்தைத் தொடர்ந்து முடித்துவிடலாம். பிறகு 7, 8 ஆம் தேதிகளில் இன்றைக்கும் நாளைக்கும் இருந்த அலுவல்களை முடித்துவிடலாம், அதாவது சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றி விடலாம் என்பது என்னுடைய சொந்தக் கருத்து. ஆகவே அன்று $1\frac{1}{2}$ மணிக்கு முடித்துவிட வேண்டும் என்பது இந்த அவையினுடைய முடிவு என்று கருதுகிறேன்.

திரு. க. சுப்பு : சட்ட முன்வடிவுகளுக்கு அதிக நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு அலுவல் ஆய்வுக்குழுவை கூட்ட முடியாத நிலைமை இருந்ததால் கூட்ட முடியவில்லை. 7-ம் தேதி சட்ட முடிவுகளை எடுத்துக்கொள்கிற போது தேவையிருந்தால் அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தைக் கூட்டுகிறேன். அதிலே முடிவு எடுக்கத் தயார். ஆகவே நாளை காலை 11.30 மணிக்கு சபை கூடும். நாளைக்குக் கேள்வி நேரம் இல்லை எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–10]

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று (5–11–1979) பகல் சுமார் 11-40 மணிக்கு பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை திரு. பெரியகருப்பன் அவர்கள் மகன் திரு. ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்பவர் பேரவையில் வீசியுள்ளார். அவர் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்டின்) காவலில் இருக்கிறார். அவரது செய்கை அவை உரிமை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் ர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

(8) அரசினர் தீர்மானங்கள்.

(அ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, உங்களது அனுமதியோடு கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முனமொழிகிறேன்.

1979 நவம்பர் 5] [திரு. கி. மனோகரன்]

''இன்று (5-11-1979) பகல் சுமார் 11-40 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள, இராமநாதபுரம் மாவட்டம், தேவகோட்டை வட்டம், சண்முகநாதபுரம் அஞ்சல், மேலசெம்பன்மாறி கிராமத்தில் இருக்கும் திரு. பெரியகருப்பன் அவர்கள் மகன் திரு. ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவரவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏழு நாட்கள் என்பது கொஞ்சம் அதிகம் என்று குறிப்பிடுகிறார்கள். எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை குறைப்பதற்கு. ஆனால் இவை தொடர்கதைகளானால் என்னவாகும் என்பதைத் தயவு செய்து நினைவிலே வைத்துக் கொண்டு, உங்கள் ஆசைப்படி மூன்று நாட்கள் என்று குறைத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். ஆகவே ''அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது'' என்பதற்குப் பதிலாக, ''அவர் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்படவேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது'' என்று மாற்றி மொழிகிறேன்.

திரு எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் அதற்கு மாறுபட்டுச் சொல்வதாக நினைக்கவேண்டாம். ஆனாலே, இதேபோல் பல தடவைகள் நடக்கின்றன, 3 நாட்கள், இரண்டு நாட்கள், ஒரு நாள் என்று போட்டால் அடிக்கடி துண்டுப் பிரசுரங்கள் வீசுவார்கள். அதனால் குழப்பம் ஏற்படுகிறது. எம். எல். ஏ. யார் என்று பார்க்காமல் கையெழுத்துப் போடும் நிலைமையெல்லாம் இருக்கிறது. இதை நன்றாகப் பரிசீலிக்காவிட்டால் ..

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இப்படிப்பட்ட நிலைமைகள் இனிமேல் நடைபெறுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று அனைத்துக் கட்சித்தலைவர்களும் உறுதி அளித்திருக்கிறார்கள். மீறி அப்படி நடக்குமானால் ஏழு நாட்கள் தவிர்க்க முடியாதது ஆகும். அதற்குமேலே தொடர்ந்தால், மாதக்கணக்கிலேகூடப் போகும்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். இப்படிப்பட்ட குற்றம் புரியக்கூடிய அளவிற்கு அந்த துண்டு நோட்டீஸில் என்ன இருந்தது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கமுடியுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:— ''இன்று (5-11-1979) பகல் சுமார் 11-40 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள, இராமநாதபுரம் மாவட்டம், தேவகோட்டை வட்டம், சண்முகநாதபுரம் அஞ்சல், மேலசெம்பன்மாறி கிராமத்தில் இருக்கும் திரு. பெரியகருப்பன் அவர்கள் மகன் திரு. ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பெற வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் நாளைய தினம் கேள்வி நேரத்தை தளர்த்துவதற்கான தீர்மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் ''வினாக்கள்-விடைகள்'' என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ நாளை (6–11–79) அன்று தளர்த்தி அந்நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.